https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் முதற்பொருள் பின்புலங்கள் - ஒரு பார்வை

## *திருக்குறளை முன்வைத்து…*

**ச. சங்கரலட்சுமி**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியற்புலம்

**முனைவர் உ. கருப்பத்தேவன்**
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்
இலக்கியத் திறனாய்வியல் துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21

**ஆய்வுச் சுருக்கம்**

*'சங்க இலக்கியம்' வகைமை நோக்கில் 'திணை இலக்கியம்' எனக் கொள்ளப்படுகின்றது. சங்க இலக்கியம் திணை மரபில் அகத்திணை, புறத்திணை என இருவகையாகத் தொல்காப்பியம் உள்ளிட்ட தமிழ்ப் பொருளிலக்கண நூல்களில் பகுக்கப்பட்டுள்ளன. 'திணை' என்னும் ஆட்சி 'ஒழுக்கம்' என்னும் பொருளைத்தருவதால் மக்கள் வாழ்க்கைக்கு ஒழுக்கம் அவசியத் தேவையாகவும் அடிப்படையாகவும் அமைகின்றது. முதலெனப் பட்ட நிலத்தில் நிகழும் பருவ மாற்றங்களின் இணைவு அதன் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் மூலமாக அமைந்து மனிதவாழ்விற்கான அடிப்படைகளை அமைத்துக் கொடுக்கின்றது. வாழ்க்கைக்கான / வாழ்க்கையின் நிலையான இருப்பிற்கான இடமும் காலமும் மனித வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளுக்கும் மூலாதாரமாக அமைவதால் இவை இரண்டுமே முதற்பொருள்களாகின்றன. சங்கத்திணை மரபின் நீட்சியாக அமையும் பதினெண் கீழ்க்கணக்கின் அறநூல்களிலும் அறக்கருத்துக்களைச் செம்மையாக உணர்த்துவதற்கு சங்கப் பாடல்களின் அன்பின் ஐந்திணைகளின் முதற்பொருள்கள் தக்க பின்புலங்களாக அமைந்துள்ளன. அவற்றைத் திருக்குறளை முன்வைத்து ஆராய்ந்து வெளிப்படுத்துவது இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

**திறன் சொற்கள்**

*திணை, ஒழுக்கம், வாழ்க்கை ஒழுங்குகள், ஒழுகலாறுகள், அறமதிப்பீடுகள், திணைச் செய்யுட்கள், திணை ஒழுங்குகள், மரபுகள், அற இலக்கியங்கள், இயற்கையோடியைந்த திணை வாழ்க்கை, புலமை மரபு, திணைசார் வாழ்க்கை, மீட்டுருவாக்கம், திணைஓர்மை, அறவியல் கருத்துக்கள், காலச்சூழல், கருப்பொருள்கள், தமிழ் நாவலாசிரியர்கள், கதைமாந்தர்கள், சட்டநூல்கள், அடிக்கருத்துக்கள், அகப்புறத்திணை உணர்வுகள், கார்காலம், கூதிர்காலம், முன்பனி, இளவேனில், முதுவேனில், தெய்வங்கள், தேவர்கள், விழா, தினை, கடல், ஐந்நிலவளம், உழவு, வேளாண்மைசார் வாழ்க்கை முதலான இலக்கியத்திறன் விளக்கச் சொற்கள் இவ்ஆய்வுக் கட்டுரையில் திறன் சொற்களாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன.*

## முன்னுரை

சங்கச் செய்யுட்கள் திணைச் செய்யுட்களாக அமைந்துள்ளன. சங்க அகத்திணைச் செய்யுட்களில் உரிப்பொருள் உயிர்ப் பொரு ளாகக் கொள்ளப்படினும், வாழ்க்கையின் அக ஒழுக்கங்களை வெளிப்படுத்துவதற்கு முதற்பொருள்களும் கருப்பொருள்களும் பின் புலங்களாக அமைந்துள்ளன. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் சேர்ந்ததே அகத்திணைச் செய்யுட்களாகும். அகத்திணையின் இந்த முதற்பொருள், திருக் குறளின் அறக்கருத்துக்களை வெளிப்படுத்து வதற்குப் பின்புலங்களாக அமைந்துள்ள பான்மை இக்கட்டுரையில் ஆராய்ந்து விளக்கப்பெற்றுள்ளன.

## அறநூல்களில் அக, புற வாழ்க்கை ஒழுங்குகள்

'திணை' என்பதற்கு ஒழுக்கம் எனப்பொருள் கொள்ளப்படுவதால் மனித வாழ்வியலுக்கு ஒழுக்கம் அவசியத்தேவைகளில் ஒன்றாகி விடுகின்றது. இந்த அடிப்படையில்தான் பதினெண்கீழ்க்கணக்கின் அறநூல்கள் மக்க ளின் வாழ்வியல் ஒழுக்கங்களையும் ஒழுகலா றுகளையும், வாழ்வியல் அறமதிப்பீடுகளைப் (Ethical Values) பின்பற்ற வேண்டிய தேவைகளையும் முறைப்படுத்தி வலியுறுத்திக் கூறுகின்றன. ஆதலால் சங்கத்தினை வாழ்க்கையில் திணைச்செய்யுட்கள் மக்களை அக, புற வாழ்க்கையில் ஒழுங்குபடுத்திய தைப் போலவே, கீழ்க்கணக்கின் அறநூல்க ளிலும் அகவாழ்க்கையும் புறவாழ்க்கையும் வரையறைகளுக்கு உட்படுத்தி ஒழுங்கு செய்யப்படுகின்றது. பழந்தமிழ்ச் செய்யுட் களில் "திணை" என்ற சொல் பெற்றிருந்த இடத்தைக் கீழ்க்கணக்கின் அறநூல்களில் "அறம்" என்ற சொல் பெற்றுள்ளன.

திணை ஒழுக்கங்கள், மரபுகளை மீறாமல் பின்பற்றப்பட வேண்டுமென்பதே சங்கத் திணைச் செய்யுட்களின் நோக்கும் போக்கு மாகும். அவ்வாறே அற இலக்கியச் செய்யுட் களிலும் அகவாழ்க்கை மற்றும் புறவாழ்க்கை அறங்கள், சில ஒழுங்கு நெறிமுறை களுடன் வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. தனி மனிதர் களுக்காகவும் சமூகநலன்களுக்காக வும் அற இலக்கியங்கள் கூறும் அறங்கள் யாவும் முறையான வாழ்வுக்கு வழிகாட்டு பவை. அவற்றை மீறக்கூடாது என்பதே அற இலக்கியச் சிந்தனைகளாக உள்ளன. இயற்கையோடியைந்த திணைவாழ்க்கையை மக்கள் ஒதுக்க முயன்றபோது அற இலக்கி யங்கள் தோன்றின. இதனை க.ஜவஹர்,

*"பேரரசுகளின் உருவாக்கப் பின்புலத்தில் நிகழ்ந்த இயற்கை அழிவுகள், அதனோடு ஒத்திசைந்து வாழ்ந்த மனித வாழ்வின் பேரவலங்கள், அதிலிருந்து மனித சமூக அறிவும் புலமை மரபும் முன்னெடுத்த அறவியல் கூறுகள் என்ற நிலைகளில் இவற்றை உற்றுநோக்கலாம். இயற்கையோடு ஒத்திசைந்து வாழ்ந்த இனக்குழு வாழ்விய லின் முந்தையப்போக்கு மீண்டும் கிடைத்த ற்கு அரியதாகப் பேரரசுகளின் காலத்தில் மாறுகின்றது"* (க.ஜவஹர், திணையுணர் பருவம், ப.38) எனத் துல்லியமாக மதிப்பிட்டுக் கூறியுள்ளார். திணை வாழ்க்கை யின் அழிவு இயற்கையை அழித்தலில் முடிவுற்றது; அதைப்போல வாழ்வியல் அறங்களை அழிப்பது சமூகத்தின் அழிவிற்கு வழிவகுக்கும் என்பதை அற இலக்கியங்கள் அழுத்தமாக எடுத்துரைக்கின்றன. ஆதலால் திணை வாழ்க்கையை மேற்கொள்வதென்ப தும், அறங்களின் நெறியில் அறவாழ்க்கையை மேற்கொள்ளும் ஒன்றெனவே கொள்ள இடம் உள்ளன.

ஆதலால்தான் 'ஒழுக்கம்', 'ஒழுங்கு' என்னும் சொற்களால் திணை குறிக்கப்படுகின்றது; மனிதர்தம் ஒழுக்கமும் ஒழுங்கும் இன்மையே சமூக அழிவுக்குக் காரணம் எனக் கூறுவதைப் போல, திணைசார் இயற்கை வாழ்க்கையை மேற்கொள்ளாமல் பெருநகரங்களின் உருவா க்கத்தாலும், வணிக நகரங்களைச் செயற்கையாகக் கட்டமைப்பதாலும் திணை வாழ்க்கைமுறைகள் அழிக்கப்படுவது மனித சமூகத்தை அழித்துவிடும். ஆதலால்தான் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறங்களை மையப்படுத்தி திணைசார் வாழ்க்கையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றன.

## திணை ஓர்மை

பேரரசுகளின் தோற்றங்களாலும் அதனை

யொட்டிய நகரமயலாக்கலாலும் திணைசார் வாழ்க்கை சிதைவுகளையும் சீர்கேடுகளையும் சந்தித்தபோதும், பழந்தமிழர் வாழ்க்கையின் அடிநாதமாக உறைந்துபோயிருக்கும் திணைசார் மனித நடத்தை ஒழுகலாறுகளும் மனவியல்புகளும் எக்காலத்திலும் வெளிப் பட்டே தீரும் என்பதைத் திணைஓர்மை குறித்த சிந்தனைகள் உளவியல் மற்றும் பண்பாட்டியல் நோக்கு நிலைகளில் வெளிப் படுத்துகின்றன. அதாவது முதற்பொருளான நிலம்சார்ந்த வாழ்க்கைச் சிந்தனைகளை மனிதர்களால் எக்காலத்திலும் மறக்க இயலாது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகத் திணையை விளக்கும் கார்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை ஆகிய ஆறு அகத்திணை நூல்களும், களவழி நாற்பது என்னும் புறத்திணை நூலும் அடங்கியிருப் பதால், இவை நீங்கிய பதினொரு அறநூல் களிலும் திணை மரபின் முதற்பொருளும் கருப்பொருளும் பின்புலங்களாக இடம்பெறு வதில் சிக்கல்கள் ஏதும் இல்லை; முதற் பொருள் மற்றும் கருப்பொருள் பின்புலங் களில் அறவியல் கருத்துக்களே உயிர்ப் பொருளாகவும் உரிப்பொருள்களாகவும் அமைந்துள்ளன.

அறஇலக்கிய நூல்களின் செய்யுட்கள் வெண்பா யாப்பினுள் குறுகிய பாடலடி களைக் கொண்டிருப்பினும், அப்பாடல் களில் திணைசார்ந்த சிந்தனைகளே அறக் கருத்துக்களாக வெளிப்பட்டு நிற்கின்றன. ஒவ்வொரு அறநூலும் இயற்றப்பட்ட காலச் சூழல் வேறுபட்டிருக்கின்றன. கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரை அற இலக்கியக் காலம் எனக் கூறப் படினும், திணைவாழ்க்கையை வெளிப்படுத் தும் சங்க இலக்கிய காலத்தனவாகக் கொள்ளப்படும் திருக்குறளில் திணைவாழ் வின் அடிப்படைகள் நுணுக்கமாகக் காணப் படுகின்றன.

### திருக்குறளில் திணைக்கூறுகள்

தமிழரின் வாழ்வியல் அறங்கள், உலகம் தழுவியவை; உலக மக்கள் அனைவர் வாழ்க்கைக்கும் பொதுவானவை என்னும் முறையில் அறங்களை வலியுறுத்திக்கூறும் திருக்குறள், இலக்கியச் சிறப்பற்ற படைப்பு மொழியைக் கொண்டதாகும். ஆயினும் திருக்குறளில் கூறப்பெற்றுள்ள ஒப்புமைகள், உவமைகள், உருவகங்கள் ஆகிய இயற்கை சார்ந்த பொருட்கள், திணைவாழ்விலிருந்து பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடுகளா கவே உள்ளன. இவ்வாறே பதினெண்கீழ்க் கணக்கின் பிற அறநூல்களும் அகநூல்களும் களவழிநாற்பது என்னும் புறநூலும் சங்கத்திணை வாழ்க்கையின் ஓர்மையை வெளிப்படுத்துவதாகவே உள்ளன. இதனை தமிழண்ணல் (இராம.பெரியகருப்பன்),

*“திணைப்பாடல்களில் அணிகள், உவமைகள், உருவகங்கள், உள்ளுறைகள், இறைச்சிகள் ஆகியவை இருப்பது கொண்டு அவற்றின் வழியே பாடல்களுக்குரிய திணைகள் அறியப்பெறும். ஏனெனில் இவ்வணிகள் முதலாயின தெய்வத்தைத் தவிர்த்த ஏனையக் கருப்பொருள்களைச் சார்ந்தே வருவன”* (தமிழண்ணல், சங்கமரபு, ப.192) எனக் கூறுவதிலிருந்து அறியலாம். கருப் பொருள்களின் துணையால் திணையை அறியலாம் என்பது தமிழண்ணல் கருத்தாக உள்ளது. சங்கப்பாடல்களில் உவமை, உள்ளுறை, இறைச்சிகளுக்காகப் பயன் படுத்தப் பெற்ற கருப்பொருள்கள் பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களிலும் புலவர்களால் அவ்வாறே பயன்படுத்தப் பெற்றுள்ளன; பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் பயின்று வரும் கருப்பொருள்கள் அப்பாடல் களின் திணைப்பண்புகளை வெளிப்படுத்து கின்றன.

### வருணனைகளில் திணைக்கூறுகள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில்தான் என்றில்லாமல் வருணைனகள் இடம்பெறும் தமிழிலக்கியப் படைப்புக்கள் அனைத்திலுமே திணைக்கூறுகள் பயின்று வந்துள்ளன. புறச்சூழலை வருணிக்கும் படைப்புக்கள் அனைத்துமே திணைச் சித்திரிப்புக்களைக் கொண்டுள்ளன. தமிழ் நாவலாசிரியர்கள் முதற்பொருளாகிய நிலம் சார்ந்து சூழல் சார்ந்தும் தம் கதைமாந்தர்களை வருணிக்கும்

போது அவர்களை அறியாமலேயே திணைக் கூறுகள் வருணனைகளாக இடம்பெற்று விடுகின்றன.

அகவாழ்க்கையாயினும் புறவாழ்க்கையாயினும் மனிதவாழ்க்கை வெளிப்பாடுகளாக அமையும் எக்கதைகள் ஆயினும் அதில் அகத்திணை, புறத்திணைக்கூறுகள் தவிர்க்க இயலாத வகையில் இடம்பெற்று விடுகின்றன. வருணனை மரபுகளில்தான் திணைக்கூறுகள் சிறப்பிடம் பெறுகின்றன. படைப்பூக்கமும் இலக்கியச் சிறப்பும் கொண்ட பாடல்கள், கதையிலக்கியங்களில் காணலாகும் முதற்பொருள், கருப்பொருள் வெளிப்பாடுகள் சார்ந்த திணைக்கூறுகள், இலக்கியச் சிறப்புக்களும் படைப்பு நயங்களும் மிகவும் குறைவாகக் காணப்படுகின்ற பதினெண் கீழ்க்கணக்கின் அறநூல்களில் காணப்படுவது கடினமானதே. சட்ட நூல்களில் விளக்கவியல் வருணனைகள் இருப்பதில்லை. இன்னின்ன குற்றங்களுக்கு இன்னின்ன தண்டனைகள் எனத் துல்லியமாகக் கூறுபவை சட்ட நூல்கள். ஆயினும் திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு ஆகிய நூல்களில் முதற்பொருள், கருப்பொருள் வருணனை மரபுகளையும் காண முடிகின்றன. திணைக்கூறுகள் அறநூல்களின் பாடல்களில் சிறுபான்மை முதற்பொருள்களாகவும், பெரும்பான்மை கருப்பொருள்களாகவும் அமைந்துள்ளன. பாடல்களின் அடிக்கருத்துக்களாக அகப்புறத்திணை உணர்வுகளே காணப்படுகின்றன.

### திருக்குறளில் முதல்பொருள் பின்புலங்கள்

*முதலெனப்படுவது நிலம்பொழுது இரண்டின்*
*இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே*
(தொல்.பொருள். இளம்(உரை.ஆ.),அகத்.நூற்.4.)

*மாயோன்மேய காடுறை உலகமும்*
*சேயோன்மேய மைவரை உலகமும்*
*வேந்தன்மேய தீம்புனல் உலகமும்*
*வருணன்மேய பெருமணல் உலகமும்*
*முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்*
*சொல்லிய முறையால் சொல்லவும் படுமே*
(மேலது, நூற்.5)

*காரும் மாலையும் முல்லை குறிஞ்சி*
*கூதிர் யாமம் என்மனார் புலவர்*
(மேலது, நூற்.6)

*பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப*
(மேலது, நூற்.7)

*வைகறை விடியல் மருதம்; எற்பாடு*
*நெய்தலால் மெய்பெறத் தோன்றும்*
(மேலது, நூற்.8)

*நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு*
*முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே*
(மேலது, நூற்.9)

*பின்பனிதானும் உரித்தென மொழிப*
(மேலது, நூற்.10)

என்னும் நூற்பாக்களில் தொல்காப்பியர் சங்கத்திணைச் செய்யுட்களின் முதற்பொருள்களையும் அதன் பின்புலங்களையும் விளங்கிக் கூறியுள்ளார்.

'முதற்பொருள்' என்பது திணைச் செய்யுட்களில் பயின்று வரும் நிலமும் பொழுதும் ஆகிய இரண்டும் ஆகும். கருநிறமுடைய திருமாலாகிய மாயோன் வீற்றிருக்கும் காடுகள் நிறைந்த நிலமும், சிவந்த நிறமுடைய சேயோனாகிய முருகன் வீற்றிருக்கும் மேகங்கள் சூழ்ந்த மலைப்பகுதியாகிய நிலமும், வேந்தன் என்றழைக்கப்படும் இந்திரன் வீற்றிருக்கும் இனிய நீர்நிலைகள் சூழ்ந்த மருதநிலமும், வருணன் வீற்றிருக்கும் கடல்சார்ந்த பெருமணல் வெளியான நிலமும் ஆகிய இந்நிலப்பகுதிகள் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் என்று அழைக்கப்படும். இவையே திணைச்செய்யுட்களின் நானிலங்கள் ஆகும்.

முல்லைநிலத்திற்குக் கார்காலம் பெரும்பொழுதாகும். மாலைக்காலம் சிறுபொழுதாகும். குறிஞ்சிநிலத்திற்குக் கூதிர்காலம் பெரும்பொழுதாகும். யாமமாகிய நன்னிரவு சிறுபொழுதாகும். பனியெதிர்பருவமாகிய முன்பனிக்காலமும் குறிஞ்சி நிலத்திற்கு உரியதாகும். ஆவணி, புரட்டாசி மாதங்கள்

கார்காலமாகும். ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் கூதிர்காலமாகும். மார்கழி, தை மாதங்கள் முன்பனிக்காலமாகும். குறிஞ்சி நிலத்திற்கு மட்டும் நான்கு மாதங்கள் பெரும்பொழுதுகளாகும்.

மருதத்திணைச் செய்யுட்களுக்கு வைகறையும் விடியலும் சிறுபொழுதுகள் ஆகும். நெய்தல் திணைச் செய்யுட்களில் எற்பாடு எனப்படும் பொழுது சாயுங்காலமே சிறப்பாக இடம் பெறும். நெய்தல் திணைச் செய்யுட்களில் பெரும்பொழுது வருணனைகள் பெரிதும் இடம்பெறுவதில்லை.

'பொதுத்திணை' என்றழைக்கப்பெறும் பாலைத் திணைச் செய்யுட்களுக்கு இளவேனில், முதுவேனில் ஆகிய வேனிற்பருவங்களுடன் நண்பகலின் கடும்வெயிலும் கூடியமைந்த புனைவுகளே சுரவழியாகும். பாலைத்திணைச் செய்யுட்களில் சுரவழி வருணனைகளே விளக்கமாகக் காணப்படுகின்றன. இளவேனில் பருவம் என்பது சித்திரை, வைகாசி மாதங்களாகும். முதுவேனில் பருவமென்பது ஆனி, ஆடி மாதங்களாகும். பாலைத்திணைச் செய்யுட்களில் பின்பனிப்பருவமும் கூறப் பெற்றுள்ளன; மாசி, பங்குனி மாதங்களே பின்பனிப் பருவங்களாகும். 'முதற்பொருளென்பது' நிலமும் நிலம் சார்ந்த புனைவுகளாகவும் அமையும் திணைச்செய்யுட்கள் ஆகும்.

*"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து*
*உள்நின்று உடற்றும் பசி"* (குறள்.13)

என்னும் குறட்பாவில் "விரிநீர் வியனுலகம்" எனக் கடலாகிய நெய்தல் நிலம் குறிக்கப்பெற்றுள்ளது. கடல் குறித்து வரும் குறட்பாக்கள் அனைத்தும் நெய்தல்நிலத்தை குறிக்கின்றன.

*நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழினி*
*தான்நல்கா தாகிவிடின்* (குறள்.17)

எனக் கடல்சார்ந்த நெய்தல் நிலம் நெடுங்கடல் எனக் கூறப்பெற்றுள்ளது.

*சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு* (குறள்.18)

என்னும் குறளில் மழைபெய்யாமல் பொய்க்கும்போது ஏற்படும் வறட்சி காரணமாக மக்கள் தெய்வங்களுக்கும் தேவர்களுக்கும் விழா எடுக்காமல் நின்று போகும் நிலை கூறப்பட்டுள்ளது. முல்லையும் குறிஞ்சியும் தம்மியல்பில் திரிந்து பாலைத்திணையாகும் நிலை இக்குறளில் கூறப்பெற்றுள்ளது.

*தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்*
*வானம் வழக்கா தெனின்* (குறள்.19)

*நீரின்று அமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின்று அமையா தொழுக்கு* (குறள்.20)

என்னும் குறட்பாக்களில் மழையின்மையால் தானமும் தவமும் அழியும், மக்கள் தம் நல்லொழுக்கத்தை விட்டுவிடுவர் எனக் கூறப்பட்டிருப்பது மழையின்மையால் நிலம் வறண்டு வாழ்க்கைக்குப் பயனற்ற பாலைநிலமாகி மக்கள் கள்வர்கள் ஆகி வழிப்பறி மற்றும் கொலைத்தொழிலில் ஈடுபடும் பின்புலங்கள் விளக்கிக் கூறப்பெற்றுள்ளன.

*என்பிலதனை வெயில்போலக் காயுமே*
*அன்பிலதனை அறம்* (குறள். 77)

என்னும் குறளில் எலும்பு இல்லாத புழுவினை வெயில் சுட்டெரிக்கும் எனக்கூறுவது பாலை நிலத்தின் வெஞ்சுரப் புலக்காட்சியே அகும்.

*அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல் மரம்தளிர்த் தற்று* (குறள். 78)

என்னும் குறளில் அன்பற்றவரின் மனம் கொடிய பாலை நிலத்திற்கு உவமையாகக் கூறப்பெற்றுள்ளது.

*உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்*
*வரனென்னும் வைப்பிற்கோர் வித்து* (குறள்.24)

என்னும் குறட்கருத்து வளமான மருதநிலம் பற்றியதாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அடக்கி யாளும் ஆற்றலுடையவன் மனம், உயர்நில

மாகிய மருதநிலத்தில் விதைத்த விதை போன்றது; இந்நிலத்தில் விதைத்த விதை நன்கு விளையும் என்பது மருதநிலத்தின் வளமையைக் குறிப்பதாகும். குறளில் "தினை" என்னும் சொல்லாட்சி ஓரிடத்தில் பயின்று வருகின்றது.

*எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்*

*தேரான் பிறனில் புகல்* (குறள்.144)

இக்குறளில் பயின்று வரும் 'தினை' என்பது குறிஞ்சிநிலத்தில் விளையும் ஒருவகைப் பயிராகும்.

*நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்*

*வித்தகர்க்கு அல்லால் அரிது* (குறள்.235)

என்னும் குறளில் "நத்தம்" என்பது கடலில் (நெய்தல் நிலப்பகுதி) நடைபெறும் முத்துக்குளித்தல் தொழிலைக் குறிக்கின்றது. சிப்பியைக் கொல்வதன் வாயிலாக முத்துக்கிடைக்கின்றது. முத்துக்குளித்தல் நெய்தல் நிலம் பரதவ மக்களின் வாழ்க்கைத் தொழிலாகும்.

*தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து*

*வேட்டுவன் புள்சிமிழ்ந் தற்று* (குறள்.274)

என்னும் குறளில் வேட்டுவன் புதலில் மறைந்திருந்து பறவைகளை வேட்டையாடும் தொழில் கூறப்பெற்றுள்ளது. குறிஞ்சி மற்றும் பாலை நிலப்பகுதிகளில் இத்தகைய பறவைகளை வேட்டையாடும் தொழில் நடைபெறுகின்றன.

திருக்குறளின் "கள்ளாமை" என்னும் அதிகாரத்தின் பத்துக்குறள்களும் களவாகிய திருட்டுத்தொழில் ஈடுபடும் பாலைநிலத்து மறவர்களாகிய களவுத்தொழில் வல்ல கள்ளர்களுக்கு உரியவை. "கொல்லாமை" என்னும் அதிகாரத்திலும் பாலைநிலத்து மழவர்களாகிய கள்வர்களின் திருட்டு மற்றும் கொலைத் தொழில் கடிந்து கூறப்பெற்றுள்ளன. கள்ளாமையும் கொல்லாமையும் மாந்தர் சமுதாய நலன்களுக்கான பொதுவான அறங்களாக இருப்பினும், திருவள்ளுவர் அவற்றை பாலைநில மக்களின் விரும்பத்தகாத கொடிய செயல்களாகவே வலியுறுத்திக் கூறியுள்ளார்.

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*

*கற்றனைத்து ஊறும் அறிவு* (குறள்.396)

என்னும் குறளில் மருதநிலத்தின் வேளாண்மைப் பயன்பாட்டு நீர்நிலையான ஊற்றுக் கிணறு அதன் நில இயற்கைத் தன்மையோடு கூறப்பெற்றுள்ளது.

*தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்*

*கொள்வர் பழிநாணுவார்* (குறள்.433)

என்னும் குறிஞ்சி நில விளைபயிரான தினையும் முல்லைநிலத் தாவரமான பனையும் அதன் நிலப் பின்புலங்களோடு விளக்கிக் கூறப்பெற்றுள்ளன.

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*

*வைத்தூறுபோலக் கெடும்* (குறள்.435)

என்னும் குறளில் கூறப்படும் "வைத்தூறு" என்பது நெற்பயிரின் வைக்கோல் ஆகும். இது மருதநிலத்தின் முக்கிய விளைபயிராகும். ஐந்து நிலங்களின் இயல்புகளும் அதன் குணங்களும் நீரினால் திரியும் என்பதை,

*நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு*

*இதைத்தியல்பது ஆகும் அறிவு* (குறள்.452)

என்னும் குறட்பா வலியுறுத்திக் கூறுகின்றது. எந்த நிலத்தில் மழைநீர் விழுந்தாலும், அம்மழைநீர் அந்த நிலத்தின் தன்மைக்கேற்ப திரிந்து மாறிவிடும்.

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*

*சால மிகுத்துப் பெயின்* (குறள்.475)

என்னும் குறளில் முல்லைநிலத்துப் பறவையான மயில்தோகையின் இயல்பு கூறப்பெற்றுள்ளது. மருதநிலத்து ஆற்றங்கரைப் பகுதிகளில் வாழும் கொக்கு என்ற பறவையின் வாழ்க்கை இயல்பு,

*கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்*

*குத்தொக்க சீர்த்த இடத்து* (குறள்.490)

எனக் கூறப்பெற்றுள்ளது. குளம், கண்மாய்,

ஏறி, குட்டை ஆகிய நீர்நிலைகள் அனைத்தி லுமே கொக்கு தனக்கு உணவாகிய மீன் அகப்படும் வரையில் காத்திருக்கும்.

***நெடும்புனலுள் வெல்லும் முதலை***
***அடும்புனலின்***

***நீங்கின் அதனைப் பிற*** (குறள்.495)

என்னும் குறளில் முதலை வாழுமிடமான கடல்போன்ற ஆழமான நீர்நிலை கூறப் பெற்றுள்ளது. ஆறலைக்கள்வர்களும் அவர் களின் ஆறலைத்தலாகிய வழிப்பறித் தொழிலும்,

***வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்***

***கோலொடு நின்றான் இரவு*** (குறள்.552)

எனக் கூறப்பெற்றுள்ளது.

***தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்***

***செல்வரும் சேர்வது நாடு*** (குறள்.731)

என்னும் குறளில் விளைச்சல் குன்றாத மருத நிலத்தின் வளமும் செழுமையும் கூறப் பெற்றுள்ளது.

***மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்***

***காடும் உடையது அரண்*** (குறள்.742)

என்னும் குறளில் நெய்தல் சார்ந்த பகுதியும் (மணிநீர்), சமவெளிப்பகுதியான மருதநிலமும் (மண்ணும்), குன்றுகள் சூழ்ந்த குறிஞ்சியும் (மலைப்பகுதியும்), முல்லைநிலமான காடும் (அணிநிழல் காடு) உடையது நல்லநாடு எனக்கூறப்பெற்றுள்ளது. இக்குறளில் ஒரு நாட்டின் சிறப்பிற்கு ஐந்நிலவளமும் தேவை யென வலியுறுத்தப் பெற்றுள்ளது. “உழவு” என்னும் அதிகாரம் மருதநிலத்தின் வேளாண்மைசார் வாழ்க்கையைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

## முடிவுரை

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் முதற்பொருள் பின்புலங்கள் – ஒரு பார்வை என்னும் பொருண்மையில் திருக்குறளின் முதற்பொருள் பின்புலங்களில் அங்கிருக்கும் உயிருடைய, உயிரற்ற கருப்பொருள்களைச் சார்ந்து பரவலாகத் திணைவாழ்க்கையின் எச்சங்கள் இக்கட்டுரையில் விளக்கிக் கூறப் பெற்றுள்ளன. ஐந்நிலங்களின் முதற்பொருள் களின் முக்கியத்துவம் சிறப்பித்துக் கூறப் பெற்று, சங்கத்திணை மரபின் நீட்சியாக அமையும் பதினெண் கீழ்க்கணக்கின் அற நூல்களிலும் அறக்கருத்துக்களைச் செம்மை யாக உணர்த்துவதற்கு சங்கப் பாடல்களின் அன்பின் ஐந்திணைகளின் முதற்பொருள்கள் தக்க பின்புலங்களாக அமைந்துள்ளன எனலாம்.

## பயன்பட்ட நூல்கள்

1. இளம்பூரணர் (உரை.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2011.
2. இராமர், சு. (தொ.ஆ.), திணைக் கோட்பாடுகளும் தமிழ் ஆய்வுச் சூழல்களும், பிறழ் வெளியீடு, மதுரை, 2018.
3. சீனிச்சாமி, துரை., திணைக் கோட்பாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 2016.
4. தமிழண்ணல், சங்கமரபு, கு.வெ.பால சுப்பிரமணியன் (மொ.பெ.ஆ.), சிந்தா மணிப் பதிப்பகம், மதுரை, 2009.
5. திருவள்ளுவர், திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், பி.இரத்தினநாயகர் அண்ட் சன்ஸ், சென்னை, பதிப்பு ஆண்டுக் குறிப்பு இல்லை.
6. நெடுஞ்செழியன், க., தமிழ் அகத்திணை மரபுகளும் இந்தியக் காதற் பாடல்களும், இரா.சக்குபாய் (பதி.ஆ.), நெல் பதிப்பகம், மதுரை, 2017.
7. பரிமேலழகர் (உரை.ஆ.), திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், கழக வெளியீடு, சென்னை, 1964.
8. மாதையன், பெ., அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009.
9. மாணிக்கம், வ.சுப., தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
10. ஜவகர், க., திணைக் கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும், காவ்யா பதிப்பகம், சென்னை, 2010.
11. ஜவஹர், க., திணையுணர் பருவம், காவ்யா பதிப்பகம், சென்னை, 2014.